**<u>சுருக்கம்</u>**

பெயர் மாற்றம் – சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 9, வார்டு – 138 லுள்ள பாண்டிச்சேரி சாலையின் பெயரினை "ஆர். எஸ். ஸ்ரீதர் சாலை" என பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை</u>**

அரசாணை (நிலை) எண்.110 நாள்: 08.06.2010

**வைகாசி – 25**
**திருவள்ளுவர் ஆண்டு – 2041**

<u>படிக்கவும்:</u>

1. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 14.12.2001

<u>மீண்டும் படிக்கவும்:</u>

2. சென்னை மாநகராட்சி ஆணையரின் கடித எண்.நி.ம.உ.து.ந.க.எண். எல்இ1/1037/2010, நாள் 05.05.2010

* * * * *

**<u>ஆணை:-</u>**

பார்வை 2 ல் படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் அவர்கள் சென்னை மாநகராட்சி, மண்டலம்– 9, வார்டு – 138, கோட்டூரில் பிறந்தவர் என்றும், தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் சென்னை மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் மற்றும் நிதித் துறையின் தலைவராகவும் பணியாற்றி இயற்கை எய்தினார் எனவும், அவர் பிறந்த கோட்டூரில் உள்ள "பாண்டிச்சேரி சாலை" என தற்போது அழைக்கப்படும் சாலையினை அவரின் நினைவாக "ஆர். எஸ். ஸ்ரீதர் சாலை" என பெயர் மாற்றம் செய்திட வேண்டுமாய் தற்போதைய வார்டு – 138 ன் மாமன்ற உறுப்பினரால் கேட்டுக் கொள்ளப்பட்டது எனவும், இதனைத் தொடர்ந்து மேற்கண்ட சாலையின் பெயரை "ஆர். எஸ். ஸ்ரீதர் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மான எண்.195, நாள் 29.04.2010 ல் அனுமதி அளித்துள்ளது எனவும், அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி, மண்டலம் – 9, வார்டு – 138 ல் உள்ள பாண்டிச்சேரி சாலையின் பெயரை "ஆர். எஸ். ஸ்ரீதர் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்ய அரசின் ஆணையை கோரியுள்ளார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையரின் முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலித்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையை தளர்த்தி சென்னை மாநகராட்சி, மண்டலம் – 9 வார்டு எண்.138 ல் உள்ள பாண்டிச்சேரி சாலையின் பெயரை "ஆர். எஸ். ஸ்ரீதர் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
காவல் துறை ஆணையர், சென்னை – 8

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநII / ந.நி.5) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல் – 1

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**